**உடுபத்தாவ பிரதேச சபை**

**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 29 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, உடுபத்தாவ பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உடுபத்தாவ பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,195,722 தொகை மற்றும் 2012 ஆம் ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத்

தண்டப்பண வருமானம் ரூபா 1,118,878 தொகை அதிகரித்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அதற்காக 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,000,000 தொகை ஆண்டின் வருமானமாகக் கணக்கு வைத்தமையின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் அந்த அளவினால் அதிகரித்து கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) காணியினதும், கட்டிடத்தினதும் பெறுமதி ரூபா 39,641,942 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 28,102,341 ஆகக் காண்பிக்கப்பட்டதன் அடிப்படையில் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 11,539,601 தொகை குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்ட 07 வேலைகளுக்காக ரூபா 2,427,998 தொகை வேலைக் கடன்பட்டோரின் கீழ் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 2,139,510 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,956,735 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 2,167,089 ஆக இருந்தது

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 768 | 831 | 481 |
| (ii) | வாடகை | 9,575 | 7,253 | 102 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 763 | 1,112 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 42,616 | 38,248 | 67 |

**2.2.2 ஆதனவரி**

மீளாய்வாண்டிற்குரிய ஆதனவரி பற்றுச்சீட்டிடல்கள் ரூபா 750,000 தொகையாக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனவரி நிலுவை ரூபா 194,197 ஆக இருந்தது. அதில் 08 தவணைகளை விடக்கூடிய 36 நிலுவை ஆதனவரி அலகுகளின் கீழ் ரூபா 88,326 தொகை காணப்பட்டது.

**2.2.3 வாடகை**

மீளாய்வாண்டில் ஆகக் குறைந்த கேள்வி ரூபா 687,635 தொகையான 12 சொத்துக்கள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மூன்று தடவைகள் கேள்வி கோரப்பட்டிருந்தும் ஆகக் குறைந்த கேள்வியான ரூபா 1,587,048 தொகையான 17 சொத்துக்களை வாடகைக்கு வழங்க முடியாதிருந்தது.

**2.2.4 தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் 02 தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்ததுடன் ஒரு கோபுரத்திற்காக ரூபா 20,000 தொகையான செயன்முறைக் கட்டணம் அறவிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக விற்பனை வரி அல்லது வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு சபை கவனம் செலுத்தியிருக்க வில்லை.

**2.2.5 வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம்**

சபை அதிகாரப் பிரதேசத்தில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்குரிய உப விதிகளின் பிரகாரம் முச்சக்கர வண்டியை நிறுத்துவதற்கு வருடாந்தம் ரூபா 250 தொகையான பதிவு செய்தல் கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு வரையில் 4 முச்சக்கர வண்டி தரிப்பிடங்களின் கீழ் 65 முச்சக்கர வண்டிகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டு வருடாந்தம் ரூபா 16,250 அளவிலான வருமானம் உழைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வருமானம் ரூபா 3,000 வரை குறைவடைந்திருந்தது.

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

(அ) வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 யூலை 25 ஆம் திகதிய ஜீஜீஆர்சீ/21/30 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வியட்நாம் வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அமையக் கொடுப்பனவாக ஐக்கிய அமெரிக்க டொலர் 30 மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியுமென காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக தலைவர் மற்றும் செயலாளரினால் ரூபா 217,131 தொகை மேலதிகமாகப் பெறப்பட்டிருந்தது.

(ஆ) 2009 யூன் 15 ஆம் திகதி சபையின் தலைவர் மற்றும் செயலாளருடன் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவர் மற்றும் செயலாளர் கையொப்பமிட்ட உடன்படிக்கையின் பிரகாரம் சபையின் வெலிப்பென்ன கஹமுல்ல நூலகம் அமைந்துள்ள காணியில் ஒரு பகுதியில் 25x20 அடி அளவில் கட்டிடத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிக் கோவையின் விதி இல. 218 இன் பிரகாரம் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சொத்துக்களின் உரிமை மற்றும் உள்ளமை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கிராம சபைகளுக்குரிய காணியில் பிரதேச சபையை அமைப்பதுடன் உரிய பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த சபை உரிய காணியை கையேற்பதற்காக இது வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக சபைக்குரியதாக கருதப்பட்டு துங்தொட்ட பிரதேசத்திலுள்ள காணியில் அனுமதியற்ற நிர்மாணம் காணப்படுவதுடன் அது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 226,320 பெறுமதியான 6 மீன் விற்பனைக் கொட்டகைகள் 2010 ஆம் ஆண்டின் போது 50 சதவீத மானியத்தின் கீழ் ரூபா 113,160 தொகைக்கு மீன்பிடி அமைச்சினால் (வடமேல்) பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 4 மீன் கொட்டகைகள் செயற்பாடற்ற வகையில் கெந்தயாய கழிவுப் பொருள் வளவில் போடப்பட்டிருந்தது.

## 2.5 வாகனப் பயன்பாடு

(அ) ஆசிய அபிவிருத்தி கடனுதவியின் கீழ் 2007 ஆம் ஆண்டில் ரூபா 5,250,000 தொகையில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட ஆர் எஸ் 1220 ஆம் இலக்க ஜேசீபீ இயந்திரத்தின் பாவனை தொடர்பாக மாதாந்த கிரய அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது ஜேசிபீ இயந்திரத்திற்காக ரூபா 330,976 தொகையில் 2875 லீற்றர் எரி பொருள் பாவிக்கப்பட்டிருந்ததுடன் இயந்திரத்திற்கான மாதாந்த கிரய அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதற்கான ஓட்டக் குறிப்பும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 மனித வளமுகாமைத்துவம்

சபையின் நிரந்தர வீதி தொழிலாளர்கள் 13 பேர் மற்றும் 6 நிரந்தர சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் நாளாந்த அடிப்படையின் கீழ் 3 சுகாதாரத் தொழிலாளர்கள் இருந்ததுடன் அவர்களின் நாளாந்த கடமைகளில் ஈடுபடுத்தல் தொடர்பாக முன்நிகழ்ச்சித் திட்டம் பேணப்பட்டிருக்கவில்லை. நாளாந்தம் கையளிக்கப்படுகின்ற கடமைகளின் அடிப்படையில் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பாக நாளாந்த அறிக்கை என்ற பெயரில் பத்திரமொன்று பேணப்பட்டிருந்தது. அதில் ஈடுபடுததப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியாக உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்களின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. குறிப்பிட்ட திகதியில் சமூகமளித்த தொழிலாளர்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறை தொடர்பாக இனங்காணக்கூடிய பதிவேடு அல்லது படிவங்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) தும்மலசூரிய பொதுச் சந்தையில் 1 ஆம் இலக்கக் கடை அனுமதியற்ற முறையில் வாடகைக்கு வழங்கல் தொடர்பாக 2012 ஏப்ரல் மாதம் சபைக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அனுமதியற்ற உப வாடகையாளர் கடையை நடாத்திச் செல்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் உரிய கடையை முத்திரை இட்டு சபைக்கு கையேற்பதற்கு 1980 இன் 46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 48,841 பெறுமதியான நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட 02 வழக்குகளுக்குரிய வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் பணத்தைச் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணம் சபைக்குக் கிடைத்திருந்தமையை இனங்காண முடியவில்லை. வழக்குப் பதிவேட்டில் வழக்குத தீர்ப்புத் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகனப் பயன்பாடு